# செய்தி வெளியீட்டு எண்: 38 11.01.2009

**செய்தி குறிப்பு**

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை**

**புளியந்தோப்பில் உள்ள மருந்து கடை ஒன்றில் காலாவதியான மருந்து விநியோகிக்கப்பட்டதாக தகவல் கிடைத்ததின் அடிப்படையில் 21.12.2009 அன்று மருந்து கட்டுப்பாடு இயக்குநர் உடனடியாக, இரண்டு முதுநிலை மருந்தாய்வாளர்கள் மற்றும் மருந்தாய்வாளர் ஒருவரையும் திருவாளர்கள் சித்ரா மெடிக்கல்ஸ், எண். 32, டெமலோஸ் சாலை, சென்னை–12–னை ஆய்வு செய்ய உத்தரவு பிறப்பித்தார். மருந்தாய்வாளர்களின் ஆய்வு அறிக்கையின்படி, உரிமம் வழங்கும் அலுவலரான மருந்து கட்டுப்பாடு உதவி இயக்குநர் அவர்கள் 22.12.2009 அன்றே மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் விதிகளின் கீழ் விளக்கம் கேட்டு நிறுவனத்திற்கு குறிப்பாணை வழங்கப்பட்டது. உரிமையாளர் 24.12.2009 அன்று தனது விளக்கத்தை சமர்ப்பித்துள்ளார். அந்த விளக்கம் விரிவாக பரிசீலிக்கப்பட்டு, மருந்து கட்டுப்பாடு உதவி இயக்குநர், மண்டலம்–II அவர்கள் படிவம் 20 மற்றும் 21 உரிமம் உடனடியாக ரத்து செய்வதற்கான ஆணையை நடைமுறைப்படுத்த பிறப்பித்துள்ளார்.**

**வி.கு. சுப்புராஜ்,**
**அரசு முதன்மைச் செயலாளர்**

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9